# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தள ஆலயப் பங்குச்சபையின் 6வது கூட்டம்,19-07-2009 அன்று மாலை 6.30 மணிக்கு எமது ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் பங்குத்தந்தை அவர்களின் ஆரம்பச் செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய கூட்டத்தில், அருட் சகோதரி கார்மேல், திருமதி கலிஸ்ரா தவராஜா, திரு. சூசைமாணிக்கம், திரு. அல்பிரட் ஞானராஜா, திரு. ரொபின் யேசுதாசன் ஆகியோர் சமூகம் தரவில்லை.

கடந்த மறைத்தளக் கூட்ட அறிக்கையை செயலாளர் வாசித்தார். பின் நமது தாய் நாட்டின் சிறுவர்களைப் பாதுகாக்கும் வகையில் அநாதை மடம் ஒன்றினைக் கட்டி அவர்களுக்கு உதவலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது பற்றி கூட்ட அறிக்கையில் குறிப்பிடப் படவில்லை என திரு. யூலியன் ஜெயரட்ணம் அவர்கள் சுட்டிக்காட்ட அந்த விடயம் அறிக்கையில் சேர்க்கப்பட்டபின் அறிக்கையினை திரு. அலெக்ஸ் மார்க்கண்டு முன்மொழிய, திரு. தேவதாஸ் விசுவாசமுத்து வழிமொழிந்தார்.

மேலும் எமது மறைத்தள மடுமாதா திருநாளை முன்னிட்டு அதன் ஆயத்தங்கள், வழிபாடுகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. அந்த வகையில் இன்றைய தேவை, துன்பத்தில் வாடுகின்ற மக்களுக்காக நாம் மன்றாடவேண்டும். எனவே, வழிபாட்டில் ஒரு மணித்தியாலம் எமது மக்களுக்காக ஒதுக்கப்பட்டு, 15 நிமிடங்கள் ரொறன்ரோ மக்களும், 15 நிமிடம் ஒட்டாவா மக்களும், 15 நிமிடங்கள் எம் மறைத்தள மக்கள் நடாத்தும் வழிபாடாகவும் இடம்பெற்று, அதைத் தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதமும், 4.30 மணிக்கு திருப்பலி ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து சுற்றுப்பிரகாரமும் செய்யப்படும் எனவும், சுற்றுப்பிரகாரம் மாலை 6.30 மணிக்குள் நிறைவுசெய்யப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. வழிபாடுகளின் நிறைவில் நிகழ்ச்சிகள் பலவும் மறைத்தள மண்டபத்தில் நடைபெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மடுமாதாவின் சுற்றுப்பிரகாரத்திற்கு, வாகனத்தில் ஒலிபெருக்கிகளைப் பொருத்துவதற்கான பொறுப்பை திரு. யூலியன் அவர்கள் ஏற்றுக்கொண்டார். தூர இடங்களில் இருந்து வருபவர்களை ஆயத்தம் செய்யப்பட்ட வாகனத்தரிப்பிடத்தக்கு அழைத்துச் சென்று, பின்பு அங்கிருந்து அவர்களை வேறுவாகனத்தில் ஆலயத்தக்கு அழைத்துவர வேண்டிய வசதிகளை, பொதுமக்கள் சிலருடன் இணைந்து செய்வதாக திரு. சார்ள்ஸ் அமிர்தநாதர் பொறுப்பேற்றுக கொண்டார். வழிபாடுகள் நிறைவு பெற்றதும், அடுத்தநாள் காலை நிகழ்வுகளுக்கு அமைவாக மண்டபத்தை விரைவாக ஒழுங்குபடுத்த முன்னின்று உதவுவதாக திரு. அலெக்ஸ் மார்க்கண்டு கூறினார். இந்த வழிபாடானது அனைத்து மக்களுக்கும் பயனளிக்கக்கூடியதாக அமையவேண்டும் எனப் பங்குத்தந்தை கேட்டுக்கொண்டார். மேலும், 08- 08- 2009 அன்று மறைத்தளத்தால் **Trois- Rivieres** என்னும் இடத்தில் அமைந்துள்ள மாதா கோவிலுக்கு திருயாத்திரை மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கான போக்குவரத்து வசதிகளை செய்வதற்க்கு, இளைஞர்களுக்குப் பொறுப்பாக இருக்கும் திரு. சார்ள்ஸ் அமிர்தநாதர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

## ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 19-07-2009

இறுதியாக, உறுப்பினர் கருத்துக்கள் கேட்கப்பட்டது. அதில் சுற்றுப்பிரகாரத்துக்கு பாவிக்கப்படும் கொடிகள் பழுதடைந்திருக்கின்றமையால் அவை சரி செய்யப்பட வேண்டும் என்னும் கருத்து முன்வைக்கப்பட்டது. அத்துடன் மருதமடு மாதா திருநாளன்று பற்பல பணிகளிலும் ஈடுபடுவர்களை அடையாளம் காணும் வகையில், 'அடையாளச் சின்னம்' வழங்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், ஆலயத்தின் முன்பக்கத்திலுள்ள அரைவட்ட ஓடுபாதையை திருத்தியமைக்கும் பொறுப்பு நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கான செலவினம் 9500 டொலர்கள் என மதிப்படப்பட்டடிருந்தது. அந்த வேலைத்திட்டத்தை குறிப்பிட்ட தொகைக்குள் பங்குச்சபை உறுப்பினர்கள் யாராவது முன்வந்து கூடிய விரைவில் செய்யவிரும்பினால் செய்யலாம் என நிர்வாக சபை உறுப்பினர்களின் பிரதிநிதியான திரு. அகஸ்ரின் விஜயகுமார் கருத்துத் தெரிவிக்க, பங்குத் தந்தையும் அதற்கு ஒப்புதல் வழங்க, திரு. யூலியன் ஜெயரட்ணம் அவர்கள் தான் முயற்சிசெய்து அந்த வேலையை முடித்துத் தருவதாகக் கூறினார்.

இறுதியில், திரு. அம்புறோஸ் தாவீது அவர்களின் இறுதிச் செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

அருட்.தந்தை அன்றூ தவராஜசிங்கம்<br>பங்குத்தந்தை<br>மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்<br>செயலாளர் (பங்குச்சபை)<br>மீட்பின் அன்னை மறைத்தளம்